பக்கங்கள் 15+8

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 27 புதன்கிழமை 10.07.2024 அதிர்வு 345

## மின்சாரம் தாக்கி இளம் தாய் சாவு!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – மன்னார் வீதியின் 4ஆம் கட்டை பகுதியில் வசித்து வந்த இளம் தாய் ஒருவர் நேற்று இரவு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

04









# கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு தலைவர் தெரிவு தள்ளிப் போனது

## கட்சி ரீதியாக தமிழரசு ஒன்றுகூடி ஆராய்ந்த பின்னரே இனி முடிவு

(ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரில் நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் தெரிவு தொடர்பான கூட்டம் இன்று நடைபெற்ற போதும் புதிய தலைவர் தேர்வு இடம்பெறவில்லை. அது தள்ளிப்போனது. இலங்கைத் தமிழரசு கட்சி, கட்சி ரீதியாக ஒன்றுகூடி ஆராய்ந்து ஒரு முடிவெடுத்த பின்னர், இது பற்றித் தீர்மானிப்பதாக இன்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா.சம்பந்தன் காலமானமையை அடுத்து இந்தப் பதவி வெற்றிடமாகியுள்ளது.

இந்தப்பதவிக்குதம்மைத்தெரிவு செய்யும்படி கோரி ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தி வந்தார்.

04

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணிக்கு இடமேயில்லை

## ரணில் துரோகி என்று சஜித் சாடல்





“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு துரோகி. அவர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைக்கும் எந்த எண்ணமும் இல்லை. சிறிகொத்தவைக் கைப்பற்றும் நோக்கமும் கிடையாது.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

04



# ரணிலுக்கே எனது ஆதரவு!

## இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த பகிரங்கம்



"கட்சி குறித்து சிந்திக்கும் நேரம் இது வல்ல. எனவே, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு வழங்குவேன்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"நாட்டைமீட்டெடுத்த, சிறந்த வேலைத் திட்டம் உடைய, வாய்ச்சொல் வீரர் அல்லாத சிறந்த தலைவருக்கே ஜனாதி பதித் தேர்தலில் ஆதரவு வழங்குவேன். எனவே, நாட்டு மக்களும் ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் முடிவையே எடுப்பார்கள் என நம்புகின்றேன்.

கட்சி பேதமின்றி இலங்கை பற்றி சிந்தித்து மக்கள் வாக்களித்தால் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் வெற்றி பெறுவார். இது கட்சி குறித்து சிந்திக்க வேண்டிய நேரம் அல்ல. தற்போது நாடு பற்றியே சிந்திக்க வேண்டும். தனிப் பட்டவர்களின் நலன் பற்றி சிந்திக்கக் கூடாது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என் பது நாமல் ராஜபக்ஷ, சாகர காரியவசம் போன்றோருக்கு உரித்தானது அல்ல. அது பலமான அமைப்பு. கூட்டு முடிவு களே எடுக்கப்பட வேண்டும்." – என்றார்.







# முள்ளிப்பொத்தானையில் அதிசொகுசு பஸ் விபத்து!

திருகோணமலை மாவட்டம், தம்பல காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி – திருகோணமலை பிரதான வீதியின் 96 ஆம் கட்டை – முள்ளிப் பொத்தானையில் கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கி வந்த அதிசொகுசு தனியார் பயணி கள் போக்குவரத்து பஸ் ஒன்று விபத் துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த பஸ் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. தனியா ருக்குச் சொந்தமான அதிசொகுசு பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகி யுள்ளது.

சாரதி, நடத்துநர் உட்பட பயணி கள் சிலர் விபத்தில் காயமடைந்துள்ள னர்.

சம்பவ இடத்துக்குத் தம்பல காமம் போக்குவரத்துப் பொலிஸார் வந்து விசாரணைகளை மேற்கொண் டனர்.

நித்திரைக் கலக்கமே விபத்துக்குக் காரணம் என ஆரம்பகட்ட விசாரனை மூலம் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளைத் தம்பல காமம் பொலிஸார் முன்னெடுத்துள் ளனர்.







# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு தற்காலிக மின்பிறப்பாக்கி வழங்கிவைப்பு

## கொடுத்த வாக்குறுதிக்கமைய அங்கஜன் எம்.பி. நடவடிக்கை

**எஸ்.நிதர்ஷன்**

கொடுத்த வாக்குறுதிக்கமைய சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு தற்காலிக மின்பிறப்பாக்கி வழங்கி வைக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விபத்து மற்றும் சத்திர சிகிச்சைகள் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளுக்கான மின்சார மாற்றீடுகள் இல்லாத நிலை தொடர்பில் கடந்த சில நாட்களாகப் பேசப்பட்டு வந்தது.

குறிப்பாக, வைத்தியசாலையில் கடமையாற்றி, தற்போது விடுமுறையில் உள்ள பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா இதுதொடர்பில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

அதனடிப்படையில், மேலதிக மின்பிறப்பாக்கியின் அவசியத்தை கருத்தில்கொண்டு வைத்தியசாலைக்கு தற்காலிக அடிப்படையில் அதனை பெற்றுக்கொடுப்பதாக கடந்த 7ஆம் திகதியன்று உறுதியளித்திருந்தேன்.

அவ்வாக்குறுதிக்கமைய, 150 கிலோவாற் வலுவுடைய மின்பிறப்பாக்கியொன்று தற்காலிக அடிப்படையில் இன்று வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்த மின்பிறப்பாக்கியை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் தற்போதைய பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது, நிரந்தர மின்பிறப்பாக்கியைப் பெற்று வைத்தியசாலையில் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், அதற்கான அறையொன்றை அமைக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுவதாகவும் வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் தெரியப்படுத்தியுள்ளார்.

மின்பிறப்பாக்கி கையளிப்பு நிகழ்வில், சாவகச்சேரி பிரதேச இணைப்பாளர் டுபாகரன், சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட எனது வட்டாரப்பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி மக்களின் தேவையுணர்ந்து எனது வேண்டுகோளை ஏற்று இந்த மின்பிறப்பாக்கிக்கான அனுசரணை வழங்கிய அன்பர்களுக்கு சாவகச்சேரி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்."

– என்றார்.







# சஜித்தை ஜனாதிபதியாக்க டலஸும் களத்தில்

## சரித ஹேரத் எம்.பி. தகவல்

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி வைப்பதற்கு டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கு ஆதரவு தெரிவித்து கூட்டணியில் இணைவோம் என்றும் கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் கூறினார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஐக்கிய தேசிய...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையுடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே புதியதொரு அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்பினோம். அதற்கு மக்கள் பேராதரவை வழங்கினர். எனவே, ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டு வைக்கும் திட்டம் இல்லை. அது ஒருபோதும் நடக்காது. ரணில் விக்கிரமசிங்க என்பவர் தற்போது மொட்டுக் கட்சியின் தலைவர்.

ஐக்கிய தேசியக் கட்சி தற்போது வங்குரோத்தடைந்துவிட்டது. எனவே, சிறிகொத்தவைக் கைப்பற்ற வேண்டிய தேவைப்பாடும் எமக்குக் கிடையாது. சிறந்த மக்கள் இயக்கமொன்று எம் வசம் உள்ளது." - என்றார்.

### மின்சாரம் தாக்கி...

பாபு துஷ்யந்தினி (வயது 28) எனும் இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி இளம் தாய் நேற்று இரவுச் சாப்பாட்டுக்காக ரைஸ் குக்கரில் சோறு சமைப்பதற்காக தயாரான போது திடீரென மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, குறித்த தாய் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிசாம் மரண விசாரணைகளை முன்னெடுத்தார். அத்துடன், உயிரிழந்த இளம் தாயின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### கூட்டமைப்பு நாடாளுமன்ற...

இன்று பிற்பகல் நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு எம்.பிக்களின் கூட்டம் நடைபெற்றது. சித்தார்த்தனைத் தவிர ஏனையோர் பிரசன்னமாகி இருந்தனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் மேற்படி தலைமைப் பதவிக்குத் தன்னுடைய பெயரை செல்வம் அடைக்கலநாதன் தாமே பிரேரித்தார்.

அது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிறிதரன் ஆரம்பத்தில் கருத்து வெளியிட்டார். அதனையே தமிரசுக் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு வழிமொழிந்தனர் எனத் தெரியவந்தது.

"செல்வம் தலைவராக இருப்பதில் ஆட்சேபனை ஏதுமில்லை. அவர் தலைவராக இருக்க, இதுவரை காலமும் இப்பணியை சம்பந்தன் சார்பில் ஆற்றி வந்த சுமந்திரனே அவற்றைத் தொடர்ந்து செய்யலாம். இருவரும் இணைந்து இந்தப் பணியை முன்னெடுக்க முடியும். முன்னெடுக்க வேண்டும். ஆயினும், செல்வமும் ஏனையோரும் இப்போது ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி என்ற ஒரு புது கூட்டமைப்பை உருவாக்கி அதில் செயற்படுகின்றனர் என அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் அதில் இருந்து கொண்டு இங்கு தமிழரசு கட்சியின் பெயரில் இருக்கும் நாடாளுமன்ற குழுவுக்கு தலைமை தாங்க முடியாது. கூட்டமைப்பில் இருந்து கொண்டு தலைமை தாங்குவது வேறு. வேறு ஒரு கூட்டணியில் இருந்து கொண்டு இதற்குத் தலைமை தாங்குவது வேறு. அப்படி அவர்கள் தலைமை தாங்குவதானால் அது குறித்து தமிழரசுக் கட்சியில் கட்சி ரீதியாக நாங்கள் சில விடயங்களை ஆராய்ந்துமுடிவெடுக்கவேண்டும்."-என்று சிறிதரன் தெளிவாக வலியுறுத்தினார்.

சுமந்திரனும் அக்கட்சியின் ஏனையோரும் அதே நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர்.

கூட்டமைப்பின் பெயரில் சுரேஷ் பிரேமச்சந்திரன் தரப்பை இணைத்துக் கொள்வதில் சிறிதரன் கடுமையான ஆட்சபனைகளை இன்றைய கலந்துரையாடலில் அடிக்கடி வெளிப்படுத்தினார்.

தங்களுடைய ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியை கைவிட்டு வர முடியாது, அதன் பெயரிலேயே செயற்படுவோம் என்ற உறுதியான நிலைப்பாட்டை செல்வம் தரப்பினர் வெளிப்படுத்தியமையால் தலைவர் தெரிவு முடிவெடுக்கப்படாமல் தள்ளிப் போயிற்று.

இறுதியில் தமிழரசு கட்சி, கட்சி ரீதியாக கூடி இந்த விடயத்தில் ஒரு முடிவை எடுத்து அறிவிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.







# சந்நிதியான் ஆச்சிரமத்தால் அறநெறிப் பாடசாலைகளுக்கு சீருடை துணிகள் வழங்கல்

வவுனியா, செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் அமைந்துள்ள அறநெறிப் பாடசாலைக்கு சீருடை துணிகள் வழங்கப்பட்டன.

இந்தப் பாடசாலையில் 75 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

வவுனியா – கணேசபுரம் திருமூலர் அறநெறிப் பாடசாலை மற்றும் நெடுங்கேணி – பழம்பாசி முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சீருடைத் துணிகளுக்கான தையல் கூலியும் வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டங்களை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.



# ரைஸ் குக்கரில் சோறு சமைக்க முற்பட்ட இளம் தாய் மின்சாரம் தாக்கியதில் பலி!

( கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம், மன்னார் வீதி, வேப்பமடு, விழுக்கை எனும் பகுதியில் வசித்து வந்த இரு பிள்ளைகளின் இளம் தாய் ஒருவர் மின்சார தாக்குதலுக்கு உள்ளாகி பலியானார்.பாபு துஷ்யந்தி (வயது 28) என்பவரே மின்சார தாக்குதலுக்கு ஆளாகி உயிரிழந்துள்ளார்.

இன்று புதன்கிழமை (10) அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று (09) செவ்வாய்க்கிழமை இரவு புதிதாக வாங்கிய ரைஸ் குக்கரில் சோறு சமைக்க எத்தனிக்கும் தருவாயில் மின்சாரம் தாக்குள்ளாகி உயிரிழந் துள்ளார்.

புத்தளம் தள வைத்தியசாலையில் இன்று புதன்கிழமை (10) காலை புத்த ளம் மற்றும் கற்பிட்டி பிரதேசத்துக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி பீ.எம். ஹிசாம் முன்னிலையில் பிரேத பரிசோதனை மற்றும் விசாரணைகள் இடம்பெற்றதன் பின்னர் மரண விசா ரணை அதிகாரி சடலத்தை உறவினர்க ளிடம் ஒப்படைத்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் நாடகம்

எந்த விடயத்தையும் செய்வது போல காட்டிக் கொண்டு, தமக்கு ஏற்றவாறு அதைக் குழப்பியடித்துக் குசும்பு பண்ணுவதில் ரணில் விக்கிரமசிங்க பெரும் நரித் தந்திரசாலி.

மாகாண சபைகள் தேர்தல் சட்டங்களை மீளக் கொண்டுவரும் ஏற்பாட்டு விடயத்திலும் கூட அதற்கு கொள்கையாளவில் இணங்குபவர் போலக் காட்டிக் கொண்டு, ஆரம்பத்திலேயே அந்த முயற்சிக்கு - முன்நகர்வுகளுக்கு - ஒளிவு மறைவாக கால் தடம் போடும் சதி நகர்வையும் அவர் சேர்ந்தே செய்கின்றார்.

மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தைச் சீர்திருத்தி, ஒழுங்குபடுத்தி, அடுத்த ஒரு வருடத்துக்குள் புதிய - ஒழுங்குபடுத்தப்பட்ட - மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தை கொண்டு வருவோம் என உறுதியளித்து, இருந்த மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தை இல்லாமலாக்கினார் நல்லாட்சி அரசின் அப்போதைய பிரதமர் ரனில் விக்கிரமசிங்க.

அதன் பின்னர், புதிய தேர்தல் சட்டத்தை உருவாக்குவதற்கான இணக்கப்பாடு நாடாளுமன்றக் கட்சிகள் இடையே வரவில்லை என்ற காரணத்தைக் காட்டி அந்தச் சட்டம் கொண்டு வரப்படாமல் இழுபறிப்பட, கடந்த ஏழு வருடங்களாக மாகாண சபைகளுக்கு தேர்தல்களே நடத்தப்படவில்லை - அதற்கான உரிய தேர்தல் சட்டம் நடைமுறையில் இல்லாதமையினால்.

இந்தப் பின்புலத்தில், மாகாண சபைகள் தொடர்பில் புதிய, சீரமைக்கப்பட்ட தேர்தல் சட்டங்கள் ஏதும் வருவதற்கு இப்போதைக்கு வாய்ப்பேயில்லை என்றும், அதனால் அப்படி ஒரு சட்ட ஒழுங்கு பின்னால் வருவதற்கு இடமளிக்கும் அதே நேரத்தில், அதுவரையில், முன்னர் இருந்த பழைய மாகாண சபைகள் தேர்தல் சட்டங்களை மீள நடைமுறைக்குக் கொண்டுவந்து, அவற்றின் கீழ் மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

அதனை எல்லா தரப்புக்களும் ஏற்று வரும் இச்சூழலில், அந்தச் சட்டத்தை மீள அப்படியே கொண்டு வருவதற்கு வழி செய்யும் தனிநபர் சட்டப் பிரேரணை ஒன்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் முன்மொழியப்பட்டு, வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தின் பரிசீலனை முடிந்து, கிடப்பில் போடப்பட்டுக் கிடக்கின்றது.

அதனை நாடாளுமன்றத்தில் எடுத்து, உரிய விவாதங்களுடன், சாதாரண பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றி, அதற்கு சட்டவலிமை கொடுப்பதற்கு ஒரு மாதம் கூடத் தேவைப்படாது, அதனை உடனடியாக முன்னெடுங்கள், தமது இந்தப் பதவிக்கால முடிவடைய முன்னர் அதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ள வேண்டும் என்று அழுத்தங்கள் வெளிப்பட்டு வருகின்றன.

அவற்றுக்குக் கொள்கையளவில் இணங்குபவராகத் தம்மை காட்டிக் கொள்ளும் ரணில் விக்கிரமசிங்க அதேசமயம் அந்த முயற்சிக்கு தனது குசும்புத்தனம் மூலம் வேட்டு வைக்கவும் தயாராகின்றார் என்பது வெளிப்படையாகியுள்ளது.

திருகோணமலையில் சம்பந்தனின் இறுதி நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய மாகாண சபை தேர்தல் சட்டங்களுக்கு இணக்கம் வராமையினால், பழைய மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தை அப்படியே கொண்டு வர வேண்டிய தேவை உள்ளது, ஆனால் மாகாண சபைகளில் இளைஞர், யுவதிகளின் அங்கத்துவத்தை அதிகரித்தல், எம்.பிக்களாக இருப்போர் அந்தப் பதவியில் இருந்தபடி மாகாண சபைகளுக்கு போட்டியிட அனுமதித்தல் போன்ற மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது எனக் கூறியிருக்கின்றார்.

அப்படி மாற்றங்கள் செய்வதாயின், உத்தேச சட்டமூலம் உயர்நீதிமன்றப் பரிசீலனைக்குப் புதிதாகப் போய் வர வேண்டி இருக்கும். அப்படி செய்து முடிக்க மேலும் பல மாதங்கள் எடுக்கலாம். ஜனாதிபதியின் தற்போதைய பதவிக்காலத்தில் செய்து முடிக்க கூடிய வேலை அல்ல அது.

ஆக, ஒரு திட்டத்தை முன்னெடுப்பது போல காட்டிக் கொண்டு, அதற்கு ஆதரவு தருவது போல செயற்பட்டு கொண்டு, மறுபுறத்தில் அதற்கு ஆப்பு வைத்து, காலத்தை இழுத்தடித்து, திரும்பவும் காலாவதியாக்கும் வேலையிலும் ரணில் விக்கிரமசிங்க சமர்த்தர்தான். மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தை மீள நடைமுறைப்படுத்தும் முயற்சியிலும் அவரின் இந்த இரட்டை அணுகுமுறை அப்பட்டமாக வெளிப்படுகின்றது.




# திருமலை சரணாலய மான்களுக்கு உணவளிக்கும் திட்டத்துக்கு நிதியுதவி

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மான்கள் சரணாலயத்தில் உள்ள மான்களுக்கு உணவளிக்கும் செயற்றிட்டத்துக்கு லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் சார்பில் சிரேஷ்ட துணைத் தலைவர் டெபெஞ்சான் முக்ஹர்ஜி நிதியுதவி செய்துள்ளார்.

இதற்கென 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதியைத் திருகோணமலை ரோட்டரி கழகத்துக்கு வழங்கியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை கழக புதிய தலைவரின் பதவி ஏற்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டபோது அவர் இந்த நன்கொடையை வழங்கினார்.



# கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை நாளை வியாழக்கிழமை மூடப்படும்!

## அம்பாறை மேலதிக அரச அதிபர் ஜெகராஜன் தெரிவித்தார்

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவுக்குச் செல்லும் பாத யாத்திரீகர்களுக்கான காட்டுப் பாதை நாளை (11) வியாழக்கிழமை மூடப்படும் என்று அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ.ஜெகராஜன் தெரிவித்தார்.

நாளை பிற்பகல் 2.30 மணியளவில் இந்த வருட பாதயாத்திரைக்கான காட்டுப் பாதை மூடப்படவுள்ளது.

அதேவேளை களுதாவளையில் இருந்து ஒருநாள் பாதை திறப்பை நீடிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

உகந்தமலை முருகனாலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

வரலாற்று சிறப்புமிக்க கதிர்காம கந்தன் ஆலய ஆடிவேல்விழா திருவிழாவுக்காக வரலாற்றில் முதல் தடவையாக அதிக யாத்திரீகர்கள் கானக பாதயாத்திரையை மேற்கொண்டு வந்தனர்.

வரலாற்றில் கானகப் பாதை திறந்த ( 30) முதல் நாளில் சுமார் 7000 பாதயாத்திரீகர்கள் பயணித்தமை இதுவே முதல் முறையாகும்.

அதேபோல உகந்தை முருகனாலய கொடியேற்றம் இடம்பெற்ற கடந்த ஆறாம் திகதி கானகத்தில் பிரவேசித்த அடியார்களின் எண்ணிக்கை 10 ஆயிரம் ஆகும். இதுவும் ஒரு வரலாற்று பதிவாகும்.

கதிர்காமத்துக்கான கானகப் பாதை கடந்த 30 ஆம் திகதி திறக்கப்பட்டு கடந்த 12 தினங்கள் அடியார்கள் செல்ல அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கதிர்காமம் மற்றும் உகந்தமலை முருகனாலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் 06 ஆம் திகதி ஆரம்பமாகியது. எதிர்வரும் 22 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# திருகோணமலை றோட்டறிக் கழக 46 ஆவது தலைவர் பதவியேற்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் 46 ஆவது தலைவராக சின்னத்துரை ஜெகதீஸ்வரன் பதவி ஏற்றுள்ளார்.

டைக் வீதியில் உள்ள றோட்டரி அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை (06) இடம்பெற்ற இந் நிகழ்வில், முதன்மை விருந்தினராக லங்கா ஐ.ஓ.சி.நிறுவனத்தின் சிரேஷ்ட துணைத் தலைவர் டெபெஞ்சான் முக்ஹர்ஜி கலந்து கொண்டார்.

இந்தப் பதவி ஏற்பு நிகழ்வில் றோட்டரி உதவி ஆளுநர் ஜெயபாலசந்திரன் மற்றும் வத்தளை, யாழ்ப்பாணம், அம்பாறை, கல்முனை றோட்டரி கழக அங்கத்தவர்களும்கலந்து கொண்டனர்.





# கிருலப்பன ஜும்ஆப் பள்ளிவாசலில் நடந்த இஸ்லாமிய புதுவருட நிகழ்வு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முஹர்ரம் இஸ்லாமிய புதுவருட நிகழ்வு கொழும்பு கிருலப்பன ஜும்ஆப் பள்ளி வாசலில் நேற்று முன்தினம் (08) இடம் பெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் எம்.எச்.ஏ.எம்.ரிப்லான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் கொழும்பு இஹ் ஸானிய்யா மதரஸாவின் அதிபர் அஷ் ஷேக் பாரூத் இஸ்லாமியப் புதுவருட முஹர்ரம் சிறப்புகள் தொடர்பில் தமிழ் மொழியிலும் கொம்பெனித் தெரு அஹதிய்யாப் பாடசாலை மாணவன் ஸமீம் நசார் சிங்கள மொழியிலும் உரையாற்றினர்.

கொம்பெனித் தெரு அஹதிய்யாப் பாடசாலையின் கஸீதா குழுவினர்களால் கஸீதா பாடப்பட்டது. கிருலப்பன ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் ஸப்ரி ஜுனுஸினால் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்கவுக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஏ.எம்.ஹேரத், கிருலப்பன ஜும்ஆப் பள்ளிவாசலின் பிரதித் தலைவர் இம்தியாஸ் முஸ்தபாவால் நினைவுச் சின்னம் வழங்கியும் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எச்.ஏ.எம்.ரிப்லான் பள்ளிவாசலின் தனதிகாரி ஸகீர் மர்ஸுக்கால் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப் பட்டனர். கிருலப்பன ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் அல்ஹாஜ் சப்ரி யூனுஸால் நிகழ்வில் நன்றியுரை நிகழ்த்தப் பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அல் ஹாஜ் ஏ.எச்.எம். பௌஸி, திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்களான எம்.எஸ். அலா அஹமட், என்.நிலூபர், இலங்கை வக்ப் சபையின் உறுப்பினர்கள், ஹஜ் குழுவின் உறுப்பினர்களான இஷாக் ஹனிபா, இஃபாஸ் நபுகான் , கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால், திணைக்கள நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் அஷ்ஷேக் முப்தி முர்சி உட்பட உலமாக்கள், மற்றும் திணைக் களத்தின் அதிகாரிகள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள், ஊர் ஜமாஅத்தி னர்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர்.







# மருதமுனை மக்கள் மண்டபத்தை பாவனைக்கு விடுவதற்கு நடவடிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கடந்த பல வருடங்களாக பாழடைந்த நிலையில் களவனிப்பாரற்றுக் காணப்படும் மருதமுனை மக்கள் மண்டபத்தை விரைவில் மக்கள் பாவனைக்குக் கைய ளிப்பதற்கு கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அண்மையில் கல்முனை மாநகர ஆணையாளராக பொறுப்பேற்று ஒரு சில தினங்களிலேயே இந்த மண் டபத்தினதும் அதன் சுற்றுச் சூழலினதும் அவல நிலையை கவனத்தில் கொண்ட அவர், அதனை உடனடியாக சீர்செய்து, மக்கள் பயன்பாட்டுக்கு விடுவதற்கு தீர்மானித்திருந்தார்.

இதற்கு அமைவாக குப்பை கூளங்களாலும் காடு வளர்ந்தும் காணப்படு கின்ற மருதமுனை மக்கள் மண்டப வளாகம் கடந்த சில தினங்களாக கல்முனை மாநகர சபையால் துரிதமாக துப்பரவு செய்யப்பட்டு வருகின்றது. இதனை பராமரிப்பதற்கென ஊழியர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இந்த நிலையில் விரைவாக இதனை மக்கள் பாவனைக்கு விடுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டதாரி ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்துள்ள பட்டதாரிகளை மேல் மாகாணத்தில் உள்வாங்குக!

## அவசர முறைமையொன்றை ஏற்படுத்துமாறு அமைச்சர் பிரசன்ன அதிகாரிகளுக்கு பணிப்பு

மேல் மாகாணத்தில் பட்டதாரி ஆசிரி யர் பரீட்சையில் சித்தியடைந்த பட்டதா ரிகளை உள்வாங்குவதற்கான அவசர முறைமையொன்றை ஏற்படுத்துமாறு அமைச்சர் பிரசன்ன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேவைப்பட்டால் ஆளுநரின் பரிந்து ரையின் பேரில் ஆசிரியர் அரசமைப்பு மற்றும் சுற்றறிக்கைகளை மாற்றுங்கள் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மேல்மாகாணத்தில் பட்டதாரி ஆசிரி யர் பரீட்சையில் சித்தியடைந்த பட்டதாரி களை இணைத்துக் கொள்வதற்கான அவசர முறைமை ஒன்றைத் தயார் செய்யுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரண துங்க, மேல்மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு நேற்று (9) இந்தப் பணிப்புரை வழங்கினார்.

இதுவரை மேல் மாகாணத்தில் பட்ட தாரி ஆசிரியர் பரீட்சையில் சித்தி யடைந்த சுமார் 3000 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கை விடயங்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் காரணமாக சுமார் 1900 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமைக்கான காரணங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

அந்த பட்டதாரிகளை இந்த வருடத் துக்குள் சேர்த்துக் கொள்ளுமாறும், எஞ்சியவர்களை அடுத்த வருடம் முதல் இரண்டு மூன்று மாதங்களுக்குள் நிய மனம் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.


மேல் மாகாண பட்டதாரி ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்த பட்டதாரிக ளுடன் பத்தரமுல்ல, கொஸ்வத்தையில் உள்ள மாகாண ஆளுநர் அலுவலகத் தில் நேற்று (09) நடைபெற்ற கலந்து ரையாடலில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டார்.

மேல் மாகாண ஆளுநருடன் கலந்து ரையாடி அதற்குத் தேவையான பரிந்து ரைகளைப் பெற்றுக் கொள்வதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது கணிதம், விஞ்ஞானம் மற்றும் பொருளாதாரம் ஆகிய பாடங் களை ஆங்கிலத்தில் கற்பிக்கும் ஆசிரி யர்களுக்கான வெற்றிடங்கள் காணப் படுகிறது என்று வலியுறுத்திய அமைச் சர், ஆசிரியர் நியமனங்களை வழங்கும் போது அது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் குறிப் பிட்டார்.

அத்துடன், பட்டதாரி ஆசிரியர் பரீட் சையில் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு உரிய பாடங்களில் ஆசிரியர் வெற்றி டங்கள் இருக்கும்வரை மூன்று மாதங் கள் அல்லது ஆறு மாதங்கள் பயிற்சிய ளிக்க ஏற்பாடு செய்யுமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மேல்மாகாண ஆளுநர் மார்ஷல் ஆஃப் த எயாபோர்ஸ் ரொஷான் குண திலக்க, மாகாண பிரதம செயலாளர் தம்மிக்கா விஜேசிங்க, மேல்மாகாண கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மகேந்திர விஜேதுங்க, ஆளுநரின் செயலாளர் பீ. சோமசிறி மற்றும் மேல்மாகாண பட்டதாரி ஆசி ரியர் பரீட்சையில் சித்தியடைந்த பட்ட தாரிகள் குழுவினர் இந்த கலந்துரை யாடலில் கலந்து கொண்டார்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# அட்டாளைச்சேனையில் உறுமய வேலைத்திட்ட இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் முன்னெடுப்பு

(எம். எப். நவாஸ்)

நாடு முழுவதும் 20 லட்சம் பூரண அளிப்புப் பத்திரங்களை வழங்கும் ஜனாதிபதி வேலை திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்கான இரண்டாட் கட்ட நடவடிக்கையில் நடமாடும் சேவை அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரதான கேட்போர் கூடத்தில் இன்று (10) நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதேச செயலாளர் பி. டி. எம். இர்பான் தலைமை தாங்கினார்.வருகை தந்த பொது மக்களுக்கு பூரண அளிப்பு தொடர்பான முழுமையான விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நடமாடும் சேவையில் கலந்து கொண்ட பயனாளிகளிடம் பொருத்தமான விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இதற்கான அழைப்பு பத்திரம் வழங்கும் துரித வேலை திட்டம் தொடர்ச்சியாக பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிகழ்வில் காணி உத்தியோகத்தர் எம் ஐ எம்.ரியாத், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.ஜே. தேவானந்தன் மற்றும் காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# மருதமுனை யுனிவர்ஸ் வி. க. புதிய சீருடை அறிமுகமாகியது

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் புதிய மேலங்கியை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு கழகத்தின் பொதுச் செயலாளர் ஏ.எம். எம்.றஜி தலைமையில் மருதமுனை எம்.சிரேஷ்ட் இன் வரவேற்பு மண்டபத்தில் இன்று (10) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஜவா கம்பஸ் நிறுவனத்தின்நிறைவேற்று முகாமைத்துவப் பணிப்பாளர் டாக்டர் எம்.எச்.எம்.முனாசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகத்திடம் புதிய மேலங்கியை கையளித்தார்.

இந்த நிகழ்வில் கழகத்தின் உயர்பீட உறுப்பினர்கள், கழக வீரர்கள், அபிமானிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன் போது யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு மேலங்கியை அன்பளிப்புச் செய்த சமூக சேவையாளர் டாக்டர் எம்.எச்.எம். முனாசிக் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.







# கல்முனை இஸ்லாமாபாத் வித்தியில் மாணவருக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் தலைமையில் இடம் பெற்றது.

2024 ஆம் கல்வியாண்டுக்கான மாணவர் தலைவர்களைத் தெரிவு செய்யும் தகுதிகாண் காலத்தில் உரிய தகைமைகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு இவ்வாறு சின்னங்கள் சூட்டப்பட்டன.

பாடசாலையின் ஒழுக்காற்றுக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதல் சின்னத்தை அதிபர் சிரேஷ்ட மாணவத் தலைவருக்கு சூட்டியதோடு பிரதி அதிபர்கள், பகுதி தலைவர்கள், ஆசிரியர்கள் ஏனைய மாணவத் தலைவர்களுக்கான சின்னங்களைச் சூட்டினர்.





# பிரிஸ்பேர்னில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல் வெளியீடும் இலக்கிய அரங்கு நிகழ்வும்

ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் பிரிஸ்பேர்ன் மாநகரில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளன.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு பிரிஸ்பேர்னில் உள்ள மவுண்ட் ஓமாணி நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

ஓகஸ்ட் 04 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 3.30 மணி முதல் 5.30 மணி வரை இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர் 'தாமரைச் செல்வி' திருமதி. ரதிதேவி கந்தசாமி வழங்குவார். அத்துடன் தமிழ் வாழ்த்துப் பாடலை பிரிஸ்பேர்ன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் பாடவுள்ளனர்.

இந்த நிகழ்வின் தலைமையுரையை ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் மூத்த செயற்பாட்டாளர் செந்தில்குமரன் ஆற்றுவார். பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை சிவா கைலாசம் நிகழ்த்துவார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை டாக்டர் துஷ்யந்தன் திசைநாயகம் ஆற்றுவார்.

இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை ரஜினிகாந்த் ஜெயராமன் ஆற்றுவார்.

ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் நடைபெறும் நூல் வெளியீடும் இலக்கிய அரங்கின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.





# டபிள் டெக்கர் பஸ் - பால் லொறி மோதிய விபத்தில் 18 பேர் மரணம்

## 19 பேருக்குக் காயம்; உத்தரபிரதேசத்தில் பரிதாபம்

உத்தரபிரதேச மாநிலம் உன்னாவ் மாவட்டத்தில் லக்னோ - ஆக்ரா விரைவுச் சாலையில் டபிள் டெக்கர் பஸ் ஒன்று, பால் லொறி மீது மோதிய விபத்தில் சிக்கி 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும், பாங்கர்மாவ் வட்ட அதிகாரி அரவிந்த் சவுராசியா தலைமையிலான பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

விபத்துக்குள்ளான டபிள் டெக்கர் பஸ்ஸில் பயணித்த 19 பேர் படுகாய மடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் இன்று அதிகாலை 5.15 மணியளவில் நடந்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த சம்பவம் தொடர்பாக உத்தர பிரதேச முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளதோடு, காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து பேசிய உத்தர பிரதேச துணை முதல்-மந்திரி பிரஜேஷ் பதக், "இந்த சம்பவத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளனர், 19 பேர் காயமடைந்து உன்னாவ் மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் உயர்மட்ட மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர். உன்னாவ் அருகே உள்ள அனைத்து மருத்துவமனைகளும் சிகிச்சை அளிப்பதற்கு தயார் நிலையில் உள்ளன. நான் வந்து அனைத்து ஏற்பாடுகளையும் பார்த்து வருகிறேன், விபத்துக்கான காரணங்கள் குறித்து விசாரணை நடத்தப்படும்.காயமடைந்தவர்களுக்கு முறையான சிகிச்சை அளிப்பதே எங்கள் முன்னுரிமை" என்று அவர் கூறினார்.






# விக்கிரவாண்டியில் இன்று வாக்குப்பதிவு விறுவிறுப்பு

## சாராயம் குடித்த 7 பேர் மருத்துவமனையில்

விக்கிரவாண்டி,ஜூலை10

தமிழகத்தில் விக்கிரவாண்டியில் இடைத்தேர்தல் வாக்குப்பதிவு இன்று விறுவிறுப்புடன் மும்முரமாக நடைபெற்று வரும் நிலையில் விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட டி.கொசபாளையம் பகுதியில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களிக்க வந்த பெண்ணுக்கு கத்திக்குத்து நிகழ்ந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் விக்கிரவாண்டி பகுதியில் சாராயம் குடித்த 7 பேர் மருத்துவமனையில் வாந்தி, மயக்கம் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் மேலும் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

புதுச்சேரியில் இருந்து சாராயம் வாங்கி வந்த நபர் விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட பூரிகுடிசை என்ற கிராமத்தில் உள்ளவர்களுக்கு கொடுத்துள்ளார். அதைக் குடித்த 7 பேர் வாந்தி, மயக்கம் காரணமாக தற்போது முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாக்குப்பதிவு நாளில் டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டு இருப்பதால் புதுச்சேரியில் இருந்து சாராயம் கடத்தி வரப்பட்டு அங்கு கொடுக்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக கஞ்சனூர் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னதாக கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்திய 60க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில், விக்கிரவாண்டி தொகுதியில் மீண்டும் சாராயம் குடித்து 7 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# 40 ஆண்டுகளில் ஆஸ்திரியா சென்ற முதல் இந்தியப் பிரதமர் மோடிதான்!

வியன்னா,ஜூலை19

2 நாள் ரஷ்ய பயணத்தை முடித்த நைந்தியப் பிரதமர் மோடி அங்கிருந்து ஆஸ்திரியா புறப்பட்டு சென்றார். விமானம் மூலம் ஆஸ்திரியா சென்ற பிரதமர் மோடிக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து ஆஸ்திரிய பிரதமர் கார்ல் நெகம்மரை இந்திய பிரதமர் மோடி சந்தித்தார். இதையடுத்து பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசித்தனர். பின்னர், இரு தலைவர்களும் நாளை அதிகாரபூர்வ ஆலோசனையில் ஈடுபட உள்ளனர்.

அதேவேளை, இந்திய பிரதமர் மோடி ஆஸ்திரியா வந்தது மகிழ்ச்சியளிப்பதாக அந்நாட்டு பிரதமர் கார்ல் நெகம்மர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கார்ல் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'பிரதமர் மோடியை வியன்னாவுக்கு வரவேற்கிறேன். உங்களை ஆஸ்திரியாவுக்கு வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆஸ்திரியாவும் இந்தியாவும் நல்ல நண்பர்கள். உங்கள் இந்த வருகையின்போது அரசியல் மற்றும் பொருளாதாரம் குறித்து ஆலோசிக்க ஆவலாக உள்ளேன்' என பதிவிட்டுள்ளார்.

கடந்த 40 ஆண்டுகளில் ஆஸ்திரியாவுக்கு சென்ற முதல் இந்திய பிரதமர் மோடி ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ரஷ்ய - இந்திய உறவு உதவும் என்கின்றது அமெரிக்கா

ரஷ்யாவுடனான இந்திய உறவு உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவர உதவும் என்று. அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றது.

இந்தியா-ரஷியா இடையிலான 22 ஆவது வருடாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி ரஷ்யா சென்றார். ரஷ்யா - உக்ரைன் இடையே போர் தொடங்கியதற்கு பிறகு மோடி ரஷ்யா சென்றிருப்பது இது முதல் முறையாகும். ரஷ்யாவுடன் இந்தியா நட்புறவு பேணுவதை அமெரிக்கா கடுமையாக எதிர்த்து வரும் சூழலில் மோடியின் இந்த பயணம் அமைந்துள்ளது. இதனிடையே மொஸ்கோவில் பிரதமர் மோடி மற்றும் அதிபர் புடின் இடையே நடந்த பேச்சுவார்த்தையில் இரு நாடுகளுக்கு இடையே 9 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

மேலும் உக்ரைன் மோதலுக்கான தீர்வு பேச்சுவார்த்தையில்தான் உள்ளது, போர்க்களத்தில் அல்ல என்று அதிபர் புடினிடம் பிரதமர் மோடி வலியுறுத்தினர் எனத் தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் ரஷ்யாவுடனான இந்தியாவின் உறவு, உக்ரைனில் உள்ள மோதலை முடிவுக்குக் கொண்டுவர, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை வலியுறுத்தும் திறனைத் தருகிறது என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "உக்ரைனில் அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளுக்கு இந்தியா உள்பட அனைத்து நாடுகளும் ஆதரவளிப்பது முக்கியமானதாக நாங்கள் கருதுகிறோம். இதனை அனைத்து நாடுகளும் உணர வேண்டியது அவசியம். ரஷ்யாவுடனான இந்தியாவின் நீண்டகால உறவு, உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கும், அமைதிக்கான நடவடிக்கையை எடுக்கவும் அந்நாட்டு அதிபர் புடினை ஊக்குவிக்கும் என்று அமெரிக்கா நம்புகிறது. போரை தொடங்கிய புடினால், அதனை முடிவுக்குக் கொண்டு வர முடியும்" என்று அவர் கூறினார்.




இதனையடுத்து அமெரிக்க வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர்களில் ஒருவரான மார்கரெட் மேக்லியோட் கூறுகையில், "இந்தியாவும் ரஷ்யாவும் மிகவும் சிறப்பான கூட்டாண்மையைப் பகிர்ந்து கொள்கின்றன. போருக்கு எதிராக ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்க இந்தியா இந்த சிறப்புக் கூட்டாண்மையைப் பயன்படுத்த விரும்புகிறோம். உக்ரைனில் ரஷ்யாவின் போர் ஐ.நா சாசனத்தை மீறுவதாகும்" என்று தெரிவித்தார்.

பக்கங்கள் - 8

கனடா முரசு

புதன்கிழமை 10/07/2024

## சிறுவர் மீது பாலியல் வன்முறை மனிடோபாவில் ஏழு பேர் கைது

மனிடோபா, ஜூலை 10

மனிடோபா மாகாணத்தில் சிறுவர்கள் பாலியல் வன்முறை விசாரணையில் ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

C2 ▶

# டொரன்டோ பெரும்பாகத்தை தாக்குகின்ற பெரில் சூறாவளி!




**ஒன்ராரியோ, ஜூலை 10**

பெரில் சூறாவளி டொரன்டோ பெரும்பாகத்தினைத் தாக்கும் என எதிர்வு கூறப்படுகிறது.

வார இறுதியில் கரீபியன் தீவில் பெரும் அழிவை ஏற்படுத்திய பெரில் சூறாவளி டொரன்டோ பெரும்பாகத்தில் கனமழையை ஏற்படுத்தும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இந்தச் சூறாவளியால் ஏற்படும் கனமழை இன்று புதன்கிழமை வரை நீடிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

C2 ▶

# காணாமல் போன 3 மலையேறிகள் பின் சடலங்களாக மீட்கப்பட்டனர்





பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூலை 10

**பிரிட்டிஷ் கொலம்பியாவில் காணாமல் போன மூன்று பேர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.**

**பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தின் ஸ்குவாமிஷ் பகுதியில் இவ்வாறு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.**

**மலையேறிகள் மூவரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

C2 ▶

# எம்.பி. பதவியேற்ற குகதாசனுக்கு கனடியத் தமிழர் பேரவை வாழ்த்து

ஒன்ராரியோ, ஜூலை 10

இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள கதிர்வேலு சண்முகம் குகதாசனுக்கு கனடியத் தமிழர் பேரவை வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளது.

இது குறித்து கனடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் –

'ஜூன் 9, 2024 (இன்று) திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற கதிர்வேலு சண்முகம் குகதாசன் அவர்களுக்கு கனடியத் தமிழர் பேரவை தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. கனடாவில் இருந்து இலங்கைக்கு திரும்பும் வரை பல வருட காலமாக கனடிய தமிழ் பேரவையின் பல மனிதாபிமான திட்டங்களில்,

C2 ▶






# கனடாவில் திரும்பப் பெறப்படும் குளிர்பானங்கள் பற்றி அறிவிப்பு

உலக அளவில், உணவுப்பொருள்களில் கிருமிகள் என்னும் விடயம் அவ்வப்போது தலைப்புச் செய்தியாகி வருகிறது.

சமீபத்தில் பிரித்தானியாவில், சாண்ட்விச் வகை உணவுகளை சாப்பிட்ட 275 பேர் உடல் நலம் பாதிக்கப்பட்டதும், அவர்களில் ஒருவர் உயிரிழுந்தமையும் நினைவிருக்கலாம்.

கனடாவில் கூட கிர்ணி பழம் மற்றும் நொறுக்குத்தீனிகளில் கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்நிலையில், கனடாவில் சில குளிர் பானங்களில், லிஸ்டீரியா என்னும் நோய்க்கிருமியின் பாதிப்பு இருக்கலாம் என கருதப்படுவதால், அவை திரும்பப் பெறப்படுவதாக கனடா உணவு பரிசோதனை ஏஜன்சி தெரிவித்துள்ளது.

கனடா முழுவதிலுள்ள கடைகளுக்கு, Silk மற்றும் Great Value பிராண்டின் 15 வகை குளிர் பானங்களை விற்கவோ, விநியோகிக்கவோ, பரிமாறவோ வேண்டாம் என்று கனடா உணவு பரிசோதனை ஏஜன்சி அறிவுறுத்தியுள்ளது. அத்துடன் இந்தக் குளிர் பானங்களை வாங்கியவர்கள் அவற்றை உட்கொள்ளவேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

எந்தெந்த குளிர் பானங்கள் திரும்பப் பெறப்படுகின்றன?

1.89 லிற்றர் அளவுள்ள, 2024, அக்டோபர் 24 best before திகதி கொண்ட கீழ்க்கண்ட குளிர்பானங்கள்:

Great Value Almond Beverage Unsweetened Original.
Great Value Almond Beverage Original.
Great Value Almond Beverage Vanilla.
Silk Almond and Coconut Unsweetened.
Silk Almond Original.
Silk Almond Dark Chocolate.
Silk Almond Unsweetened.
Silk Almond Unsweetened Vanilla.
Silk Coconut Original.

1.75 லிற்றர் அளவுள்ள, 2024, அக்டோபர் 24 best before திகதி கொண்ட கீழ்க்கண்ட குளிர்பானங்கள்:

Silk Oat Original.
Silk Oat Vanilla.
Silk Oat Dark Chocolate.
Silk Oat Unsweetened.
Silk Oat Unsweetened Vanilla.
Silk Almond and Cashew Unsweetened.
Silk Almond and Cashew Unsweetened Vanilla.

மற்றும், 1.89 லிற்றர் அளவுள்ள, 2024, செப்டம்பர் 27 best before திகதி கொண்ட Silk Coconut இனிப்பு ஏற்றப்படாத பானங்களும் திரும்பப் பெறப்படுகின்றன.

---

**சிறுவர் மீது...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர் வன்முறை, கடத்தல் விசாரணை தொடர்பாக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர்கள் 34 முதல் 44 வயதுக்கு உட்பட்டவர்கள் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக 65 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவர்களினால் பாதிக்கப்பட்ட இரண்டு 15 வயது சிறுமிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும் 13 அல்லது 14 வயது சிறுமிகளும் இவர்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

**டொரன்டோ...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் டொரன்டோ பெரும்பாகத்திற்கு சிறப்பு வானிலை எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது

மழையின் அளவு சில இடங்களில் 50 மில்லி மீட்டரை தாண்டும் எனவும், சில வேளைகளில் பெருமழையாக மாறும் சாத்தியமாகும் உள்ளதாகவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

---

**காணாமல்போன...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எட்வெல் பீக் மலையுச்சியில் ஏறும் நோக்கில் கடந்த மே மாதம் அந்தப் பகுதிக்கு இந்த மூன்று பேரும் சென்றுள்ளனர்.

எனினும் சில தினங்களின் பின்னர் அவர்களுடனான அனைத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

பனிப்பாறைகளைக் கொண்ட அந்த மலைத் தொடரின் உச்சியை அடையும் முயற்சியின் போது பல்வேறு சவால்களை இந்த மலையேறிகள் எதிர்நோக்கியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறெனினும் இந்த மலையேறிகளின் மரணம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

---

**எம்.பி. பதவியேற்ற...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக தாயகத்தில் நாம் செய்து வந்த பல திட்டங்களில் குகதாசன் எங்களுடன் நெருக்கமாக பணியாற்றியிருந்தார். சமூக நலன் மற்றும் சமூக–பொருளாதார மேம்பாட்டிற்கான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு என்றும் முன்மாதிரியாக அமையும். மேலும் சமூகத்தில் நல்ல தாக்கங்களை ஏற்படுத்துவதில் அவருடன் இணைந்து செயற்பட்டதில் கனடிய தமிழர் பேரவை பெருமை கொள்கின்றது. குகதாசன் அவர்கள் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினராக மக்களிற்கு தொடர்ச்சியாக சேவை செய்வாரென எதிர்நோக்கியுள்ளோம்.” – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# உலகின் கார் திருட்டுக்கு தலையாய நகரம் கனடா!

கனடாவில் கார் திருட்டுச் சம்பவங்கள் உலக நாடுகளில் எங்கும் நடக்காத வகையில் அதிகரித்துள்ள நிலையில், அது தொடர்பான விரிவான பின்னணி வெளியாகியுள்ளது.

கனடாவில் கடந்த 2022இல் மட்டும் 105,000 கார்கள் திருடப்பட்டுள்ளன. அதாவது 5 நிமிடத்திற்கு ஒரு கார் என திருட்டு சம்பவம் நடந்துள்ளது.

இந்த நிலையில், கார் திருட்டு சம்பவங்கள் அதிகமாக நடக்கும் மிக மோசமான 10 நாடுகளின் பட்டியலில் கனடாவையும் இணைத்து மிக சமீபத்தில் இன்டர்போல் பட்டியலிட்டது.

அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கையில், கார் ஒன்று திருட்டு போனால், அதைப் பயன்படுத்தி மிகக் கொடூரமான வன்முறை சம்பவங்கள் முன்னெடுக்கப்படும், அல்லது உள்ளூரிலேயே கனேடியர்களுக்கு விற்கப்படும், அல்லது உருமாற்றம் செய்து வெளிநாடுகளில் விற்கப்படும் எனக் குறிப்பிடுகின்றனர்.

கடந்த 2022 அக்டோபர் மாதம் ஒன்றாறியோவில் குடியிருக்கும் ஒருவரின் வாகனம் திருடப்பட்டுள்ளது. அதன் பின்னணியில் இருவர் இருப்பதும் கண்காணிப்பு கமெராவில் பதிவானது.

சில மாதங்களுக்கு பின்னர் அதே வாகனம் ஆப்பிரிக்க நாடான கானாவில் இணையதளம் ஒன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளமையை அறிந்து அந்த நபர் நொறுங்கிப் போயுள்ளார்.



இதனிடையே, கடந்த பெப்ரவரி முதல் கனடாவில் இருந்து திருடப்பட்ட 1,500 க்கும் மேற்பட்ட கார்களை உலகின் பல நாடுகளில் விற்பனைக்கு பட்டியலிடப்பட்டுள்ளமையைக் கண்டறிந்துள்ளதாக இன்டர்போல் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வாரமும் சுமார் 200 கார்களை அடையாளம்கண்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கனடாவில் கடந்த ஓராண்டில் மட்டும் கார் திருட்டு சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காப்பீடு தொகை என சுமார் 1 பில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டுள்ளது.

கார் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளமையை அடுத்து, கனேடிய மக்கள் தற்போது கண்டறியும் கருவிகளை பொருத்துவதுடன், பாதுகாப்பு அதிகாரிகளையும் தங்கள் தெருக்களில் அமர்த்தியுள்ளனர்.

கொவிட் பெருந்தொற்றுக்கு பிறகு தான் அமெரிக்கா, கனடா மற்றும் பிரித்தானியாவில் கார் திருட்டு சம்பவங்கள் பல மடங்காக அதிகரித்துள்ளன. இந்த விவகாரத்தில் கனேடிய பொலிஸார் தீவிரமாக செயல்பட்டு வருவதுடன், திருட்டுப் போன கார்களில் சிலவற்றை மீட்டுள்ளனர்.

கடந்த அக்டோபர் மாதம் ரொறன்ரோ பொலிஸார் வெளியிட்ட தகவலில், 11 மாதம் விசாரணை முன்னெடுத்ததில் 1080 வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன எனவும், 550 வழக்குகளுக்கு மேல் பதியப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் நடுப்பகுதியிலிருந்து மார்ச் இறுதி வரை மாண்ட்ரீல் துறைமுகத்தில் பொலிஸார் முன்னெடுத்த சோதனையில், 600 திருட்டு வாகனங்களை அடையாளம் கண்டுள்ளனர்.

சுமார் 400 கப்பல் கொள்கலன்களை ஆய்வு செய்த நிலையில் இச்சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. 2023ல் மட்டும் மாண்ட்ரீல் துறைமுகத்தில் இருந்து சுமார் 1.7 மில்லியன் கப்பல் கொள்கலன்கள் வெளியேறுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.







# கனடாவில் சூறையாடப்பட்ட 400 கிலோ தங்கமும் இந்தியாவுக்கும் டுபாய்க்கும் கடத்தப்பட்டு விட்டன?

கனடாவில் சூறையாடப்பட்ட 400 கிலோ தங்கம் இந்தியாவிற்கு கடத்தப்பட்டதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

கனடாவில் றொறன்ரோ நகரத்தில் உள்ள பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து கடந்த ஆண்டு திருடப்பட்ட 20 மில்லியன் கனேடிய டொலர் பெறுமதியான 400 கிலோ தங்கம் இந்தியா மற்றும் துபாய்க்கு கடத்தப்பட்டிருக்கலாம் என கனேடிய பொலிஸார் சந்தேகிக்கின்றனர் எனக் கூறியுள்ளனர்.

கடந்த ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி பியர்சன் விமான நிலையத்தில் உள்ள கனடா சரக்கு டெர்மினலில் இருந்து 6,600 தங்கக் கட்டிகள் அபகரிக்கப்பட்டன. 3 நாட்களுக்கு பிறகு தங்கம் சூறையாடப்பட்டது பொலிஸாருக்குத் தெரியவந்தது.

400 கிலோ எடையுள்ள இந்தத் தங்கக் கட்டிககளின் விலை இலங்கை பணமதிப்பில் சுமார் ரூ.450 கோடி.

அபகரிக்கப்பட்ட தங்கக் கட்டிகள் இன்று வரை மீட்கப்படவில்லை. இந்தத் தங்கம் இந்தியா மற்றும் துபாய்க்கு சென்றிருக்கலாம் என கனேடிய பொலிஸார் அச்சம் தெரிவித்துள்ளனர்.

நெட்ஃபிளிக்ஸின் கிரைம் சீரிஸ் பாணியில் இந்த அபகரிப்பு நடந்ததாகக் கனடாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் நடந்த மூன்று நாள்களுக்குப் பிறகு, ஏப்ரல் 20 அன்று, சரக்கு முழுவதும் அபகரிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த அபகரிப்புக்கு போலி ரசீது பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த திருட்டு கைது செய்யப்பட்ட குற்றவாளிகளில் இந்திய வம்சாவளியை சேர்ந்த 3 பேரும் உள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது வரலாற்றில் மிகப்பாரிய சூறையாடல் என்று பொலிஸார் விவரித்துள்ளனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் குறித்து தகவல் அளித்த பொலிஸார், விமான நிறுவன ஊழியர்கள் இருவரின் உதவியுடன் இந்த அபகரிப்பு நடந்துள்ளதாக கூறியுள்ளனர். தற்போது அந்த ஊழியர்கள் மீது வழக்கு நடந்து வருகிறது.

இந்த தங்கத்தை உருக்கி தங்க வளையல்கள் தயாரிக்கப்பட்டு பின்னர் விற்பனை செய்யப்படுவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.





# கல்கரி ஸ்டெம்பீட் நிகழ்வு நெரிசலில் காயமுற்ற 3 குதிரைகள் கருணைக் கொலை செய்யப்பட்டன

**அல்பேர்ட்டா, ஜூலை 10**

கல்கரி ஸ்டெம்பீட் நிகழ்வின் போது காயமடைந்த மூன்று குதிரைகள் கருணைக் கொலை செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு நாள்களில் காயமடைந்த மூன்று விலங்குகள் இறந்தன என அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஸ்டெம்பீட் நிகழ்வில் காயமடைந்த விலங்குகள் கால்நடை மருத்துவரால் சம்பவ இடத்தில் பரிசோதிக்கப்பட்டதன் பின்னர், அவற்றை கருணைக் கொலை செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, திங்கட்கிழமை ஆகிய மூன்று தினங்களில் காயமடைந்த மூன்று விலங்குகள் கருணைக் கொலை செய்யப்பட்டுள்ளன.

விலங்கு காயமடைந்த பிறகு உடனடியாக மருத்துவ கவனிப்பைப் பெற்றன. ஆனால் ஒரு கால்நடை மருத்துவர் இறுதியில் அவற்றைக் கருணைக் கொலை செய்வது ‘மனிதாபிமானம்’ என்று முடிவு செய்தார்.

இந்த நெரிசல் சம்பவத்தை ‘மிகவும் அசாதாரணமானது மற்றும் துரதிர்ஷ்டவசமானது’ என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர். ஆனால் காயம் பற்றிய விவரங்களை வழங்கவில்லை.









# கனடாவில் பூர்வீகக் குடிமக்களின் சுயநிர்ணயத்துக்கு அரசு ஆதரவு

## பழங்குடி உறவுகள் அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு

**நுனாவுட், ஜூலை 10**

பூர்வீகக் குடிமக்களான நுனாவும்மிமுவிட் மற்றும் அனைத்து இனுயிட் மக்களினதும் சுயநிர்ணயத்திற்கும் ஆதவளிப்பதன் மூலம் அரசாங்கம் தொடர்ந்து நல்லிணக்கத்தை மேம்படுத்தும் என பழங்குடி உறவுகள் அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

சுமார் இருபத்தியைந்து சமூகங்களை உள்ளடக்கிய நுனாவுட் தினத்தையொட்டி அமைச்சர் ஆனந்தசங்கரி சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள செய்தியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இனுயிட் குடிகள் பல்லாயிரம் ஆண்டுகள் தமது சுய ஆளுகையில் இருந்ததாகவும், ஜோன் அமாகோலிக் போன்ற இனுயிட் தலைவர்களால் அது சாத்தியமாக இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த தலைமுறையின் நினைவாகவே நுனாவுட் தினம் கொண்டாடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பழங்குடிகளின் குழந்தை நல அமைப்புகளை மாற்றியமைப்பதற்கான உடன்பாடு கிட்டியது

**ஒன்ராரியோ, ஜூலை 10**

பழங்குடிகளின் குழந்தை நல அமைப்புகளை மாற்றியமைப்பதற்கான உடன்பாடு ஒன்றை மத்திய அரசாங்கத்துடன் எட்டியுள்ளதாக பழங்குடிகள் சபையின் தேசியத் தலைவர் தெரிவித்துள்ளார்.

'இது நீண்ட கால சீர்திருத்தம்' என்றும், 'இங்கே இழப்பீடு கிடைத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்' எனவும் சிண்டி உட்ஹவுஸ் நேபினாக் குறிப்பிட்டுள்ளார்.



வுட்ஹவுஸ் நேபினாக் டிசம்பரில் தேசியத் தலைவராகப் பதவியேற்ற பிறகு அவர் நடத்தும் முதல் ஆண்டு கூட்டத்தின் முதல் நாள், குழந்தைகள் நலனில் அதிக கவனம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

நீண்ட கால சீர்திருத்தம் மற்றும் இழப்பீடு பற்றிய புதுப்பிப்புகள் குறித்த முழுமையான அமர்வு மெய்நிகர் வழியில் இடம்பெற்றது.

இதன் போது தலைவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே அறையில் அனுமதிக்கப்பட்டமையுடன், ஊடகங்கள் வெளியே செல்லுமாறு பணிக்கப்பட்டன.




# பெருந்தொகையான உணவுப் பொருள்கள் ஒரே நாளில் நன்கொடையாகச் சேகரிப்பு

**பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூலை 10**

கனடாவில் ஒரே நாளில் பெருந்தொகை உணவுப் பொருள்கள் நன்கொடையாக சேகரிக்கப்பட்டுள்ளது.

சர்ரே பகுதியில் அமைந்துள்ள குரு நானாக் உணவு வங்கியே இவ்வாறு பாரியளவு உணவுப் பொருள்களை திரட்டியுள்ளது.

நான்காம் ஆண்டு நிறைவக் முன்னிட்டு இவ்வாறு உணவுப் பொருள்கள் திரட்டப்பட்டுள்ளன.

ஒரே நாளில் குறித்த உணவு வங்கி 384.5 தொன் எடையுடைய உணவுப் பொருள்களை திரட்டியுள்ளது.

வட அமெரிக்காவில் இவ்வாறு ஒரே நாளில் அதிகளவில் உணவுப் பொருள்கள் திரட்டப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இது கருதப்படுகின்றது.

சுமார் 11 மணித்தியாலங்களில் இவ்வாறு பாரியளவு தொகை உணவுப் பொருள்கள் திரட்டப்பட்டன என உணவு வங்கியின் பிரதானி நீராஜ் வாலியா தெரிவித்துள்ளார்.

பேஸ்தா, அரிசி, சூப் உள்ளிட்ட பல்வேறு உணவுப் பொருள்கள் இவ்வாறு திரட்டப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.







# பசுமைக் கட்சியின் துணைத் தலைவரான ஜொனதன் பதவியிலிருந்து திடீர் விலகல்

**ஒன்ராரியோ, ஜூலை 10**

பசுமைக் கட்சியின் துணைத் தலைவர் பதவி விலககிறார் என அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காகப் பசுமைக் கட்சியின் துணைத் தலைவர் பதவியில் இருந்து விலககின்றார் என ஜொனதன் பெட்னியோல்ட் அறிவித்துள்ளார்.

ஒட்டாவாவில் பசுமைக் கட்சி தலைவர் எலிசபத் மேயுடன் இணைந்து அவர் இந்த அறிவிப்பை நேற்று வெளியிட்டார்.

தனது முடிவு குறித்து மேலும் கருத்து எதுவும் தெரிவிக்கப் போவதில்லை என அவர் கூறியுள்ளார்.

எலிசபத் மே மற்றும் ஜொனதன் பெட்னியோல்ட் ஆகியோர் இணைந்து 2022இல் பசுமைக் கட்சியின் தலைமைப் பதவியைப் பெற்றனர்.

அதன் பின்னர் இவர்கள் இருவரும் முறையே தலைவராகவும், துணைத் தலைவராகவும் செயல்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

எலிசெபத் மே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மைக் மோரிஸ் ஆகியோருடன் இணைந்து செயற்பட்டதனைத் தாம் கௌரவமாக கருதுகின்றார் எனவும் ஜொனதன் பெட்னியோல்ட் தெரிவித்துள்ளார்.

கட்சியை மறுசீரமைப்பதற்கு பங்களிப்பு வழங்கியமை மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜொனதனின் தீர்மானம் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் அளிப்பதாக எலிசெபத் மே தெரிவித்துள்ளார்.